# இறையருள்
# IRAIARUL

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY

**Volume 19 No : 12** **DECEMBER 2015**



## Editorial Board

*Patron*

**His Excellency**

**Mar George Rajendran SDB**

*Chief Editor*

**Fr. Joseph Santhosh**

*Executive Editor*

**Mr. Soundara Raj**

*Associate Editors*

**Fr. K.J. Antony SDB**

**Mr. Edwinson**

**Mr. Berlin Athencod**



Published by

**Fr. Joseph Santhosh**

**Bishop's House**

**Post Box No . 12**

**Thuckalay - 629 175**

**K.K.Dist,Tamil Nadu,India.**

Printed at

**Pulari Offset Press**

**Thuckalay.**

**Ph:04651-252570**


## உள்ளே...


| | |
|---|---|
| Bishop's Message | 2 |
| தமிழக ஆயர் பேரவை | 11 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 18 |
| மிஷன் லீக் | 20 |
| சமூக சேவை சங்கம் | 23 |
| இளையோர் இயக்கம் | 24 |
| வின்சென்ட் தே பவுல் | 27 |
| இல்வாழ்வு இயக்கம் | 28 |
| அல்போன்சா கல்லூரி | 33 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 34 |
| செங்கோட்டை செய்திகள் | 35 |
| இரக்கத்தின் ஆண்டு செபம் | 39 |
| Bishop's Engagements | 40 |

# BISHOP'S MESSAGE

Greetings and Blessings for the season of Annunciation and the Feast of Christmas!

**The Reason for the Season**

We are entering a new liturgical season and a new liturgical year. The reason for this season and as for every season, it is Jesus himself. We never lose focus on Jesus: he is our saviour.

At a bus stop or railway station, at the doctor's, or at the exams results notice board, there is always anxiety of waiting. We await something important that would affect our life, change the course of our life, determine what and who we will be after the meeting and encounter. Now we wait for the Lord and this waiting is much more important than any other type of waiting we just mentioned!

**God's Mercy in Flesh and Blood**

Jesus is God's mercy personified, made real in flesh and blood. Zechariah sings for joy praising God saying, "He has raised up for us a mighty saviour... to show mercy to our ancestors..." (Lk 1: 69, 72). And today we experience that mercy of God in Jesus Christ, "through forgiveness of all [our] sins," and experience "the compassionate heart of our God." (Lk 1:78).

Mary too sings for joy of this truth and she says that the Lord remembers his mercy, the mercy promised to our fathers (Lk 1:54). Mercy, compassion, loving-kindness – all these are promised to our forefathers and today we are the beneficiaries. Today we await the Son of God who will be born for us.

God's mercy for us is assured and is permanently stamped in human history when Jesus, the anointed one, the messiah was born on that glorious day. History is not simply of the past. Today the grace and mercy of God is made available to each one of us, to us we who believe.

## Year of Mercy and Jesus' Birth

On 8th December we will be inaugurating the year of Mercy. It is indeed very meaningful and apt, even if it be a coincident, that we celebrate Christmas this same month. Christmas is but the celebration of realization of God's mercy in flesh and blood in our midst, in the human history.

Christmas is not a celebration of birth of just another baby. It is the birth of our Saviour, of our salvation and redemption. Redemption means paying a price. God pays the price through sacrificing his only son: "For God so loved the world that he gave his one and only Son, that whoever believes in him shall not perish but have eternal life" (Jn 3:16). This is true mercy. Sinners though we are, God in his mercy has redeemed us through Jesus Christ.

Jesus our Good Shepherd makes real this mercy of God when he lays down his life for his sheep (Jn 10:15). Jesus states the reason of his coming. He says, "I have come that they may have life, and have it to the full (Jn 10:10). Jesus' suffering, death, and resurrection completes the redemption story of God's mercy. It is this mercy which gives us Christians a living hope. St. Peter in his first epistle exclaims: "Blessed be the God and Father of our Lord Jesus Christ! By his great mercy we have been born anew to a living hope through the resurrection of Jesus Christ from the dead" (1Pet 1:3).

## Mystery of Mercy and Mystery of Jesus Birth

Pope Francis unarguably declares: our salvation depends on mercy. He says, "We need constantly to contemplate the mystery of mercy. It is a wellspring of joy, serenity, and peace" and "Mercy: the ultimate and supreme act by which God comes to meet us" (*Misericordiae Vultus* 2). God comes to meet us in and through Jesus. The mystery of Jesus' Birth is the mystery of Mercy. Jesus' birth is not a mystery just because it was a virgin birth. It is much more a mystery because God who should have punished us for our sins, through his mercy today he forgives us

and takes us to be his children.

God's mercy is universal but it must be appropriated: it must be accepted by a person and be made one's own. Thus when the Word becomes Flesh (Jn 1:14) only those who receive him are given the right to be children of God (Jn 1:12). We are born again in him "not of blood nor of the will of the flesh nor of the will of man, but of God" (Jn 1:13). Here is the mystery unfolding to us as grace and truth: Jesus who dwelt at the beginning with God today dwells among us, so that we who are flesh be saved through the Word that becomes Flesh. It is a mystery of God's Mercy and Love, yet awaiting our acceptance. And it is not we who actually wait: but it is God who awaits us.

I wish you all a meaningful and Merciful experience of Christmas!

**NEWS AND EVENTS**

**1.CML Rally**

Cherupushpam Mission League Annual Rally was conducted on 1 November 2015. The Rally began from Annikarai at 2.00 pm and ended at Padanthalumoodu school grounds. It was very encouraging to see most of our children from our parishes to have come to participate in spite of a threatening rain. In fact God blessed the day with a dry condition though it looked it would rain heavily.

I congratulate Rev. Fr. Shojo Erupathanchilchira the director and his team, all the sisters, the catechism teachers and everyone for organizing the Annual Rally very well. I also thank Fr. Shojo once again for the successful release of the *Sirumalar* monthly.

**2.Priests Conference**

An emergency Priests Conference was conducted at Padanthalumoodu on 1$^{st}$ November after the CML rally. The meeting was to discuss the plan for the forthcoming 19$^{th}$ diocesan day celebration. I thank our fathers for the sharing and for the useful input they had given on that day. Since the conference was

held on 1st itself, the scheduled priest conference for the 10th November was cancelled.

**3.19th Diocesan Day Celebration cum**

**Jubilee of Syro-Malabar Extension to South India**

The Diamond Jubilee celebration of the extension of Syro-Malabar Mission to South India was celebrated on the 19th Diocesan Day held on 14th November at Kalluvilai. His Grace Mar Joseph Powathil gave us great joy by taking great pains to come all the way from Changanassery and join the celebration. The Archbishop presided over the function and felicitated us and shared from his heart about the growth of our Thuckalay mission. Rev. Fr. Mani, the VG of Changanassery too shared about the growth of the Diocese and felicitated it. We gratefully remembered on that day all the pioneer missionaries and those who cooperated in the growth of the Thuckalay mission. Thanks to Rev. Fr. Antony Jose, Fr. Robins Kuzhikodil and their team for presenting us with a very well-prepared documentary on the history of the Thuckalay Diocese and I thank all those who made the day a memorable one.

**4.Thadikarankonam convent blessing**

The blessing and inauguration of the new building of the Thadikarankonam FCC convent was held on 26 November 2015. I once again thank and congratulate Rev. Mother Celia FCC and her team of sisters for hitting another milestone in the mission work of the Diocese and for the consolidation of their works in this region. It was good to see many of our priests and friends participating in the ceremony. I thank them for coming over to Thadikarankonam.

I am very happy to witness in our diocese the unstinted generosity and commitment of all women religious to the various missions entrusted to them. I reciprocate by assuring my accompaniment and assistance as well as those of the

presbyterium and the faithful to them. God bless all our sisters in the Thuckalay Mission.

**5.The CMC Vice-Province**

The CMC Vice-Province had their Provincial Election Synaxis from 14th to 17th November. Rev. Sr. Alice Viji CMC was re-elected as the Vice-Provincial. The Assistant Vice-Provincial is Rev. Sr. Agnetta CMC. The councillors are, Rev. Sr. Therese CMC, Rev. Sr. Alphonse Jose CMC, and Rev. Sr. Jessy Therese CMC. The finance secretary is Rev. Sr. Roselet CMC, and the Vice-Provincial secretary is Rev. Sr. Anne Maria CMC. We congratulate Rev. Sr. Viji and the new team as they assume their office and we assure them of our prayerful support.

**6.National Eucharistic Congress**

A five member team headed by Rev. Fr. Jose Muttathupadam VG and comprising of Rev. Sr. Ansit SABS, Mr. Ramesh Pallikonam, Mr. Abin Smith Kattathurai, Mrs. Benila Selvan Manjalumoodu went to Bombay to take part in the National Eucharistic congress that took place from 12th to 15th November. The main subject of Eucharistic congress was “Nourished by CHRIST to Nourish others.” The programme consisted of Sharing of Faith Experience, Praise and worship, Catechesis, Testimonies, Adoration of Blessed sacrament, Celebration of faith in regional basis, Cultural programme, Eucharistic Procession, and celebration of Holy Mass in Three rites (Latin, Syro-Malabar and Syro-Malankara). “It was a very good experience for everyone who participated in the congress,” says Fr. Jose VG. The participants included 73 Bishops, 130 Priests, 125 Sisters, and more than 600 lay people from 133 Dioceses.

**7.Cardinal’s brother passes away**

Cardinal Mar George Alencherry’s brother Mr. A. P. Augustine passed away on 17th of November. The funeral was held on 19th November at Thuruthy. Some of our fathers and sisters

from our Diocese and I had participated in the funeral service. We extend our heartfelt condolences and prayers to our dear Cardinal and to the family members and relatives of Mr. Augustine.

**8.Demise of beloved ones**

We condole the deaths of the beloved ones of Rev. Fr. Thomas Paul Urumpackal, of Rev. Sr. Lincitta CMC, and of Rev. Sr. Anila FCC.

a.Rev. Fr. Thomas Paul Urumpackal lost his younger sister Rev. Sr. Maria Dasi SH aged 69, on 7th November. She died at Anicad, Changanassery

b.Rev. Sr. Lincitta CMC lost her mother Mrs. Rosamma, 83. Sr. Lincitta's mother passed away at Veroor, Changanassery on 9th November.

c.Rev. Sr. Anila FCC lost her uncle, younger brother of her mother, Rev. Fr. Chacko Valiyaveetil aged 76. He died in Changanassery Priest Home on 2nd November.

We assure them of our prayerful support at this moment of loss and grief and pray for the souls of the departed ones.

**9.New Kurusady blessing**

I was happy to bless the new Kurusady at St. Martin de Porres Church Kazhuvanthittai on 3rd November 2015 and at Christ the King Church, Palapallam on 13th November 2015. I congratulate the parish priests of both the parishes, Rev. Fr. Shojo and Rev. Fr. Justin and the parish council members for their efforts at coordinating the construction and completion of the Kurusadys.

**FORTHCOMING EVENTS**

**1.Diocesan Bible Convention cum Religious year Exhibition**

Annual Bible Convention will be held 4th, 5th, and 6th of December 2015 at Sacred Heart Church, Padanthalumoodu. I invite everyone of you to be present all the three days. Kuzhanthai Iso Iyakkam children will have social retreat on 5th and 6th at the same time.

Since the Catechism children, children from Mission League and from Kuzhanthai Iso Iyakkam will be present on 5th and 6th December, we thought of organising the long awaited Religious year exhibition. The exhibition is organized by the sisters and priests of the religious congregations. Rev. Fr. Seby and Rev. Fr. Linslal will make a presentation about the vocation of the Diocesan priests. I encourage all the Mission League children to take part in the exhibition. Primarily this exhibition is meant for Vocation promotion.

**2. Year of Mercy Inauguration**

The inauguration of the Year of Mercy will be held on 8th December at 9.30 am in Padanthalumoodu. I invite you all to come and participate in this meaningful event of the Inauguration of the Holy Year.

**3.Priestly Ordination of Rev. Deacon Ritto Thoompunkal**

Rev. Deacon Ritto Thoompunkal will be ordained priest on 28th December 2015 in his home parish Fathimapuram, Changanassery. We wish Deacon Ritto all the best and assure him of our prayers. I encourage as many of us as possible to participate in the Ordination ceremony and pray for our Deacon Ritto.

**4.Pre-Christmas Gathering and Priest Conference**

Pre-Christmas Gathering and Priest Conference will be held on 16th December at our Minor Seminary, Mukkoottukal.

**5.Liturgical Wall calendar**

I am grateful to Rev. Fr. Justin for preparing the liturgical wall calendar and to Rev. Fr. Ginoy and his team for designing and printing.

**6.Uraviam prayer books**

A draft of the New Uraviam prayer book is being distributed for a trial use. Kindly use the new version for Uraviam meetings. The fathers will share their experiences and finalise the prayer

book in our February meeting. Kindly do give your suggestions also for improvement.

**7.Sacramentary in Tamil**

The new Tamil version of the Sacramentary called *Kudasagal* will come into force from 25th December 2015. I thank Rev. Fr. Justin Cheruvelil and the Liturgical department for undertaking the translation work and completing it successfully.

**INFORMATION**

1.We welcome back our deacons to the diocese for their Diaconate ministry. Dn. Samuel will serve at Manjalumoodu, Dn. Justin Sudeesh at Nithiravilai, Dn. Ajin Jose at KKSSS, and Dn. Anil Raj at the Minor Seminary. They will be in these places until February after which they will have immediate preparations towards their priestly ordinations. We wish them all a beautiful experience of the Diaconate ministry.

2.We will be celebrating the Syro-Malabar mission week in January. More information will be given by Fr. Shojo the CML director and Fr. Alex Puthettu the Assistant director regarding the celebration. Syro-Malabar Mission Sunday is on 10th January and the Special Collection for Syro-Malabar Mission will be made on that day.

3.The FCC Province of Thuckalay are having their Provincial Election Synaxis from 27th November to 2nd December. Let us remember them in our prayers.

4.Inauguration of the new College building of St. Alphonsa College of Arts & Science will be held on January 17, 2016. His Beatitude Cardinal George Alencherry will be the Chief guest for the function.

**CONCLUSION**

I had made my personal retreat from 23rd to 26th November at Don Bosco Monvila. I remembered you all and had prayed for you in a special way during my retreat.

Prayers work miracles. The first miracle God's grace can work in us is the conversion of our hearts and God's forgiveness for our sins. Then the first prayer on our lips must be the prayer for God's mercy. The Year of Mercy which we are about to commence invites us to trust in God who is merciful and who is ready to forgive our sins. As we are about to begin this season of Annunciation with the 25 days fast and as we await Christmas, let us make use of this opportunity to inspire in ourselves personal and interior conversion.

Wish you all a meaningful and Blessed Christmas!


Yours in Christ,

**+ George Rajendran SDB**


Bishop of Thuckalay

---


## Pope Francis
# TWEETS




**Pope Francis** @Pontifex Nov 28
I have great hope for Africa, and for the harvest of grace that the Lord is preparing in your midst.




**Pope Francis** @Pontifex Nov 28
Uganda has experienced the witness of Christian martyrs. May they help us spread the joy of the Gospel without fear.



**Pope Francis** @Pontifex Nov 27
The world is witnessing an unprecedented migration of peoples. I want to thank Uganda for its generosity in welcoming refugees.



**Pope Francis** @Pontifex Nov 26
May my visit to Africa be a sign of the Church's esteem for all religions, and strengthen our bonds of friendship.



**Pope Francis** @Pontifex Nov 15
I am happy to pray today with the Lutheran community in Rome. May God bless all who work for dialogue and Christian unity.

# இறை இரக்க யூபிலி ஆண்டு

08.11.2015 - 20.11.2016

## இரக்கத்திற்கான இறை அழைத்தல்

இறை இயேசுவில் அன்புள்ள குருக்கள், துறவறத்தார் மற்றும் இறை மக்கள் அனைவருக்கும் தமிழக ஆயர்களின் ஆசீரும் வாழ்த்துக்களும்!

## இறை இரக்கத்தின் யூபிலி

திருத்தந்தை பிரான்சிஸ் இறை இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டை அறிவித்திருக்கிறார். நம் விண்ணகத் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல இரக்கமுள்ளவர்களாய் இருக்க அழைப்பு பெற்றுள்ள நாம், (லூக். 6:36) அதைச் சிறப்பாக உணர்ந்து வாழ்ந்து காட்டும் நோக்குடன், 2015 ஏப்ரல் மாதம் 11ஆம் தேதியன்று "இரக்கத்தின் முகம்" என்னும் தலைப்பில் அவர் வெளியிட்ட ஆவணத்தின் மூலம் இப்புனித ஆண்டை பற்றிய அதிகாரப்பூர்வமான அறிவிப்பை வெளியிட்டார்.

இரண்டாம் வத்திக்கான் சங்க நிறைவின் 50-ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் 2015 டிசம்பர் 8-ஆம் தேதியன்று புனித பேதுரு பேராலயத்தில் திருவாயிலைத் திறந்து, திருத்தந்தை துவங்கி வைக்கவிருக்கும் இந்த யூபிலி ஆண்டு, 2016 நவம்பர் 20-ஆம் தேதியன்று கிறிஸ்து அரசர் பெருவிழா அன்று நிறைவு பெறும். இந்த யூபிலி ஆண்டின் முக்கியத்துவத்தைக் குறித்துத் திருத்தந்தை கூறுகையில், "சிறப்பு வாய்ந்த வரலாற்று மாற்றங்கள் நிகழும் இக்காலக் கட்டத்தில், இறைவனின் உடனிருப்பையும் நெருக்கத்தையும் உலகிற்கு வெளிப்படுத்தும் அடையாளங்களைத் திருச்சபை வழங்க கடமைப்பட்டிருக்கிறது. இறைத் தந்தையின் இரக்கத்தின் அடையாளமாகவும், கருவியாகவும் விளங்க, உயிர்ப்பு விழாவன்று நம் ஆண்டவர் திருச்சபைக்கு அளித்த மறைப்பணியின் உண்மைப் பொருளை ஆய்ந்து அறியவும் இதுவே சரியான நேரம்" என்றார்.

## இரக்கம் இறைவனின் இயல்பு

விவிலியத்தில் இறைவன் இரக்கக் குணம் கொண்டவராக மட்டும் அல்லாமல், இரக்கமே உருவானவராகவும் சித்தரிக்கப்படுகிறார். விவிலியம், திருச்சபை மரபு, இறை மக்களின்

ஒட்டு மொத்த நம்பிக்கை வாழ்க்கை ஆகிய அனைத்தும், இரக்கமே இறைவனின் தனிச் சிறந்த பண்பு என்பதற்கு ஆதாரமாய் விளங்குகின்றன என்கிறார் புனித இரண்டாம் ஜாண்பால்.

கட்புலனாகாத கடவுளின் சாயலைக் கட்புலனாக்கும் இயேசுவில் (கொலோ 1:15) நாம் கடவுளைக் கண்டுணர்ந்து அவரில், இரக்கத்தின் முழுமையை (எபே 2: 4-7) இலவசக் கொடையாக சுவைத்திருக்கிறோம். நாம் பாவிகளாக இருந்தபோதும் கிறிஸ்து நமக்காகத் தியாகப் பலியானார் என்பதில் கடவுளின் அன்பின் தன்மையை நாம் புரிந்து கொண்டோம் (உரோ 5:8). இதனை அடிப்படையாகக் கொண்டே, திருத்தந்தை தமது ஆவணத்தில் இயேசுவை இறை இரக்கத்தின் அடையாளம் எனச் சித்தரிக்கிறார். இரக்கமே உருவான தந்தையின் உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்டு (தொ.நூ. 1:27) இயேசுவின் சிலுவைப் பலியினால் புனித இனமாக மீட்கப்பட்ட நாம் (1பேதுரு 2:9) தூய ஆவியாரால் இறைத் தந்தையின் இரக்கத்தைப் பிரதிபலிக்க கடமைப்பட்டிருக்கின்றோம். “செல், கடவுள் உனக்கு காட்டிய இரக்கத்தைக் குறித்து அவர்களுக்கு சொல்” என்று கெரசேனர் பகுதியைச் சேர்ந்த பேய் பிடித்தவருக்கு இயேசு பிறப்பித்த அதே ஆணை இன்று நமக்கும் அளிக்கப்படுகிறது. (மாற். 5:19)

**இரக்கத்திற்கான அவசர அழைப்பு**

இரக்கத்தின் கருவியாய்த் திகழ்வதில்தான் திருச்சபையின் வாழ்வு, பொருள் பெறுகிறது. எனவே திருச்சபையின் அனைத்து மேய்ப்புப் பணிகளும் நம்பிக்கையாளர்களுக்கு இறைவனின் நீடிய இரக்கத்தை வெளிப்படுத்த வேண்டும். திருச்சபையின் போதனையிலும் சாட்சியத்திலும் இரக்கத்திற்குத் தட்டுப்பாடு இருத்தலாகாது.

நமது திருமுழுக்கின் விளைவாக இறை இரக்கத்தின் சாட்சிகளாய்த் திகழ நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இந்த இறையழைத்தல் சரியான முறையில் வாழ்வாக்கப்படும்போது நாம் கிறிஸ்துவின் உடலாக மாறுகிறோம். உலகை இரக்கத்துடன் நோக்க இறைவனின் வழிகளாக, நன்மை செய்ய விரையும் அவரின் கால்களாக, உலகிற்கு ஆசீர் வழங்க அவரின்

திருக்கைகளாக நாம் மாறும்பொழுது புனித அவிலா தெரசம்மாள் கண்ட கனவு நனவாகும்.

**எல்லைகளைத் தாண்டும் இரக்கம்**

கடவுளின் இரக்கம் எல்லைகளைத் தாண்டி அனைவரையும் அரவணைக்கும் இயல்பு கொண்டது. அவரது இரக்கம் அவரது படைப்பு அனைத்தின்மீதும் உள்ளது (திபா. 145:9) இறைமகன் இயேசு, மக்களைப் பிரித்து வைத்திருந்த மதில்களைத் தகர்த்தெறிந்தார். தனிமைச் சிறைகளிலிருந்தும் பிரிவினைகளை உண்டாக்கும் ஆதிக்கச் சக்திகளிலிருந்தும் நம்மை விடுவித்தார். இனம், நாடு, பண்பாடு, ஏற்றத்தாழ்வு, பாலினப் பாகுபாடு முதலியவற்றை களைந்தார். ஒருவர் மற்றவரிடமிருந்து நம்மைப் பிரித்து வைக்கும் சக்திகளையும், பிறரது துயரத்தைக் கண்டும் இளகாத மனநிலையையும், இறைவனின் இரக்கம் குணமாக்குகின்றது. திருத்தந்தை கூறுவது போல, திருச்சபையை மக்களின் வாழ்க்கைச் சூழலிலிருந்து அன்னியப்படுத்தி, அதை கோட்டையாக்கிவிட்டோம். அதன் மதில்களை இப்போது தகர்த்தெறிந்து நற்செய்தியைப் புதிய விதத்தில் அறிவிக்க இந்த யூபிலி ஆண்டில் முற்படுவோம்.

**இரக்கமே மறைப்பணி**

மனித அவலங்களைக் கண்டும் மனம் இளகாது நம் உள்ளங்கள் இன்று இறுகிப்போய்விட்ட நிலை வேதனை அளிக்கிறது. வீதியோரம் கவனிப்பாரற்றுக் கிடக்கும் மனிதரை எவ்விதச் சலனமும் இன்றிக் கடந்து போகிறோம். போதைக்கு வாழ்வை இழந்து நிற்கும் இளையோர், கணவரால் அடி உதைக்கு உள்ளாகும் மனைவிகள், நியாயமான ஊதியம் மறுக்கப்படும் தொழிலாளர்கள், கடனுக்கு நிலத்தை இழந்து தவிக்கும் விவசாயிகள், வருவாய் போதாமல் தத்தளிக்கும் நடுத்தரக் குடும்பத்தினர், சொந்த இடங்களிலிருந்து புலம் பெயர்ந்து அகதிகளாய் நிற்கும் பழங்குடியினர், அநியாயமாய் உயர்ந்து நிற்கும் மருத்துவச் செலவுகள் எனப் பல நிலைகளில் நம் சகோதர சகோதரிகள் நம் கண் முன்பே துன்புறும்போதும் நாம் அதைக் குறித்துக் கவலைப்படுவதில்லை. ஊழல், ஏழ்மை, வன்முறை, வேலையில்லாமை எனச் சமூக அநீதிகள் நாள்தோறும் நம்

கிராமங்களிலும், தொகுதிகளிலும், குடும்பங்களிலும், அன்பியங்களிலும் அரங்கேறும் போதும், இயற்கைச் சீரழிவு மனிதரால் ஏற்படுகின்ற போதும் நமது உள்ளம் உருகுவதில்லை. இரக்கத்திற்கான இறை அழைப்பு இத்தகைய இறுகிய உள்ளங்களை ஊடுருவுகிறது. நம்மால் தடுக்கப்படக்கூடிய, தடுக்கப்பட வேண்டிய தீமைகளை எதிர்க்காதபோது கிறிஸ்தவக் கடமையில் நாம் தவறுவதால் பாவம் செய்கிறோம் என நாம் உணர வேண்டும். இறை இரக்கம் நம்மை ஒழுங்குப்படுத்தி மன்னிப்பு, கனிவு, சகிப்புத்தன்மை ஆகிய பண்புகளைக் கொண்ட புதிய கண்ணோட்டத்துடன் நம் சமூகச் சூழ்நிலைகளை அணுக வழிவகுக்கிறது.

**இரக்கத்தின் தரம்**

இரக்கத்திற்கான அழைப்பு நம்மிடமிருந்து வெறும் பரிதாபத்தை அன்று, மாறாக மனித அவலங்களை எதிர்கொண்டு வெற்றி பெற நமது முழுமையான ஈடுபாட்டை எதிர்பார்க்கிறது. துன்பப்படும் ஒருவரின் நிலை கண்டு நம்மில் எழும் அனுதாபம், அவரது உணர்வையே நமதாக மாற்ற வேண்டும். இதையே "இன்றைய உலகில் திருச்சபை" எனும் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு பின்வருமாறு கூறுகிறது. "மகிழ்வும், எதிர்நோக்கும், ஏக்கமும், கவலையும், இன்றைய மனிதரின் வாழ்வில் குறிப்பாக ஏழைகள் மற்றும் துன்புறுவோர் அனைவரின் வாழ்வில் உள்ளன. இம்மனிதரின் மகிழ்வும், எதிர்நோக்கும், ஏக்கமும், கவலையும் கிறிஸ்தவர்களுக்கு முற்றிலும் உரியனவே, கிறிஸ்துவைப் பின்பற்றும் இவர்களின் இதயத்தில் உண்மையான மனிதக் கூறுகள்யாவும் எதிரொலிக்கத்தான் செய்கின்றன. எனவேதான், கிறிஸ்தவச் சமூகம், மனித குலத்தோடும் மனிதகுல வரலாற்றோடும் உண்மையிலே தான் நெருங்கி இணைக்கப் பெற்றுள்ளது என்பதை உணர்கின்றது." (இ.உ.தி.1)

**இரக்கம் நம் இல்லங்களில் தொடங்க வேண்டும்**

நம் குடும்பங்கள் இரக்கத்தின் உண்மை இயல்பைக் கற்றுக் கொடுக்கும் பல்கலைக்கழகங்களாக மாற வேண்டும். நம் அன்பியங்கள், பக்த சபைகள், பணிக்குழுக்கள், துறவறச் சபைகள் ஆகியவற்றின் வாழ்வும், பணியும் முதல் கிறிஸ்தவக் குழுமத்தின்

முன்மாதிரிகையைப் பின்பற்ற வேண்டும். அவர்கள் "அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர். அவர்களுள் எவரும் தமது உடமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை. எல்லாம் அவர்களுக்கு பொதுவாய் இருந்தது." (திப. 4:32, காண்: திப. 2:42-47) இரக்கத்திற்கான நமது அழைப்பு இத்தகைய இலக்கை நோக்கி நம்மை வழிநடத்த வேண்டும். இறைத் தந்தையின் இரக்க முகத்தைத் தங்கள் அருளடையாளப் பணியில் நமக்குக் குறித்து காட்டும் குருக்கள், இதில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.

## இரக்கம் ஒரு இணைந்த முயற்சி

இரக்கத்திற்கான அழைத்தல் மற்றத் திருச்சபைகள், மதங்கள், அரசு மற்றும் அரசுசாரா நிறுவனங்கள் ஆகியவற்றிலுள்ள நல்லெண்ணம் படைத்தவர்களோடு ஒன்றிணைந்து செயலாற்ற நம்மைத் தூண்டுகிறது. நன்மை செய்யும் மனப்பாங்கு, நம்மைச் சமயங்கள், கோட்பாடுகள் கடந்து ஒருங்கிணைக்கிறது என்பது திருத்தந்தையின் தளராத நம்பிக்கை. பிற சமயங்களோடு அன்புறவும் தோழமையும் கொண்டு கிறிஸ்தவ நம்பிக்கைக்கும் வாழ்விற்கும் சாட்சியம் பகரும்போது, அவர்களிடம் காணப்படும் ஆன்மீகம் மற்றும் மதிப்பீடுகளைக் கண்டுணரவும், பாதுகாக்கவும் நம்மால் இயலும் என தாய் திருச்சபை நமக்குக் கற்பிக்கிறது.

## மரியாவின் வழியில் இரக்கம்

அனைவரின் மனங்கவர்ந்த "கிருபை தயாபத்து மாதாவே" செபத்தில், மரியா எவ்வாறு இரக்கத்தின் அன்னையாக இருக்கிறார் என்பதை உணர்கிறோம். பிறர் நலனில் அக்கறை கொண்ட அன்னையின் கண்கள், இரசம் தீர்ந்துபோனதை உணர்ந்தவுடன், அவரது இரக்கம் அக்குடும்பத்தை அவமானத்திலிருந்து காப்பாற்ற வழி தேடியது. அவரது பரிந்துரையினால் இயேசுவின் முதல் புதுமை நிகழ்ந்தேறியது. அவரது இரக்கம் சிலுவைக்கு அடியில் தம் மகனின் சடலம் சுமக்கும் தியாகத்தை தாண்டியும் தொடர்கிறது. இரக்கத்தின் முன்மாதிரி நம் அன்னை மரியா.

***சில பரிந்துரைகள்***

திருத்தந்தையின் ஆவணமானது இந்த யூபிலி ஆண்டினை, பொருள் உள்ள வகையில் கொண்டாட நல்ல சில பரிந்துரைகளை முன் வைக்கிறது:

1. **ஒப்புரவு அருளடையாளம்:** இந்த அருளடையாளத்தில்தான் இணையில்லா இறை இரக்கத்தை நாம் ஆழமான விதத்தில் அனுபவிக்கிறோம். இறைவனின் மன்னிப்பு நம்மைப் புது மனிதர்களாய் மாற்றுகிறது. எனவே ஒப்புரவு அருளடையாளத்தை வழங்கும் அருள்பணியாளர்களை இறை இரக்கத்தின் உண்மையான அடையாளங்களாய் விளங்கத் திருத்தந்தை அழைக்கிறார்.
2. **இரக்கத்தின் மறைப்பணியாளர்கள்:** திருச்சபையினுடைய தாய்மைப் பண்பின் பிரதிபலிப்பாக இப்புனித ஆண்டில், திருத்தந்தை தாம் மட்டுமே மன்னிக்க கூடிய பாவங்களையும் மன்னிக்கும் அதிகாரத்துடன் இரக்கத்தின் மறைப்பணியாளர்களை அனுப்ப திட்டமிட்டிருக்கிறார்.
3. **இரக்கத்தின் வாயில்:** வழக்கமாக உரோமை நகரின் நான்கு பேராலயங்களின் திருக்கதவுகளும் யூபிலி ஆண்டுகளில் திருப்பயணிகள் நுழைந்து யூபிலியின் நிறை பேறுபலனை பெற திறக்கப்படும், யூபிலி வரலாற்றில் முதல் முறையாக இந்த ஆண்டு மறைமாவட்ட பேராலயங்கள் மற்றும் திருத்தலங்களிலும் திருவாயில்கள் திறக்கப்படும்.
4. **திருப்பயணங்கள்:** நமது மனமாற்றத்தின் உந்துசக்தியாகத் திருப்பயணங்கள் உதவ வேண்டும் என திருத்தந்தை விரும்புகிறார். எனவே உரோமை நகரின் திருக்கதவையோ அல்லது உலகின் வேறுபகுதிகளில் உள்ள திருக்கதவையோ அடையும் அடையாளமாக ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற விதத்தில் திருப்பயணம் மேற்கொள்ளலாம்.
5. **இரக்கத்தின் ஆன்மீக, சமூகக்கடமைகள்:** இறை இரக்கத்தைப் பகிர்ந்துக்கொள்ளச் சிறந்த வழி இரக்கத்தின் கடமைகளுக்கான நமது பிரமாணிக்கத்தைப் புதுப்பித்துக் கொள்வதாகும்.

6.அ. **இரக்கத்தின் ஆன்மீகக் கடமைகள் பின்வருமாறு**

1. அவநம்பிக்கையில் இருப்போருக்கு ஆலோசனை வழங்குதல்
2. அறியாமையில் இருப்போருக்கு அறிவொளியூட்டுதல்
3. பாவிகள் மனம்மாற அறிவுறுத்தல்
4. துன்புறுவோரைத் தேற்றுதல் - வருந்துவோருக்கு ஆறுதல் அளித்தல்
5. பிறர் இழைத்த தவறுகளை மன்னித்தல் - தீமைகளை மன்னித்தல்
6. தீமை செய்வோரைப் பொறுமையோடு ஏற்றுக்கொள்ளுதல்
7. இறந்தோருக்காகவும் வாழ்வோருக்காகவும் செபித்தல்

6. **ஆ. இரக்கத்தின் சமூகக் கடமைகள் பின்வருமாறு**

1. பசியாய் இருப்பவர்களுக்கு உணவு கொடுத்தல்
2. தாகமாயிருப்போரின் தாகம் தணித்தல்
3. ஆடையின்றி இருப்பவர்களுக்கு ஆடை அணிவித்தல்
4. அன்னியரை ஏற்றுக் கொள்ளுதல்
5. நோயாளிகளைக் குணப்படுத்துதல்
6. சிறையிலிருப்போரைச் சந்தித்தல்
7. இறந்தோரை நல்லடக்கம் செய்தல்

இரக்கத்திற்கான அழைப்பு நம்மை மகிழ்ச்சியால் நிரப்பவல்லது. புனித பவுல் கூறுவதுபோல, இரக்கச் செயல்களை மனவருத்தத்தோடோ கட்டாயத்தினாலோ செய்யாமல் முகமலர்ச்சியோடு செய்வோம் (காண்: 2 கொரி. 9:7).

இறை இரக்கத்தின் யூபிலி ஆண்டுக் கொண்டாட்டம் இறைத் தந்தையின் இரக்கத்தைப் பிரதிபலிக்க நாம் பெற்றுள்ள அழைத்தலைச் சிறப்புடன் வாழ உதவுவதாக! “உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்” (லூக். 6:36) என்று இயேசு விடுத்த அழைப்பிற்கு நாம் தலைவணங்கி இறை இரக்க யூபிலி ஆண்டை கொண்டாடுவோம்.

இவண்,
மேதகு ஆயர் பீட்டர் ரெமிஜியஸ்
தலைவர் - தமிழக ஆயர் பேரவை

# குழந்தை ஈசோ இயக்கம்

"மன்பதையில் ஒருவர் எத்துணை நிறைவு உள்ளவராய் இருந்தாலும், உம்மிடமிருந்து வரும் ஞானம் அவருக்கு இல்லையேல் அவர் ஒன்றும் இல்லாதவராய்க் கருதப்படுவார்." (சா.ஞா. 9:6.)

**பொறுப்பாளர்கள் கூடுகை**

நமது மறைமாவட்ட குழந்தை ஈசோ இயக்க அமைப்பாளர் மற்றும் பொறுப்பாளர்களின் கூட்டமானது 21-11-2015 அன்று



கல்லுவிளையில் வைத்து மதியம் 2.30 மணியளவில் இயக்குநர் அருட்தந்தை ஜோமோன் மங்கலாமடத்தில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வருகைதந்த அனைவரையும் தலைவர் அவர்கள் வரவேற்றார்கள். பின் அருட்தந்தை பெலிக்ஸ் அவர்கள். "சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள்." என்னும் விவிலிய வசனத்தை மையமாகக் கொண்டு வகுப்பு நடத்தினார்கள். அத்தோடு குழந்தை ஈசோ இயக்கப்பணியைச் சிறப்பாக செய்பவர்களையும் வாழ்த்தினார்கள்.

தொடர்ந்து செய்கைப்பாடல்கள் மற்றும் பாடல் பயிற்சி அளிக்கப்பட்டது. குழந்தைகளிடம் தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் கதைகளைக் கூறும் போது கற்பனைத் திறனுடனும் செய்கையுடனும் பயிற்றுவிக்க வேண்டும். விவிலியத்திலுள்ள சிறுசிறுக் கதைகளை எடுத்து குழந்தைகளை நடிக்க வைத்து நடிப்பாற்றலையும் வளர்க்க வேண்டும் என்றும் கூறினார்.

**இயக்குநரின் அறிவிப்புக்கள்**

1. மறைமாவட்ட நற்செய்திப் பெருவிழாவோடு இணைந்து குழந்தைகளுக்கான சிறப்பு தியானம் டிசம்பர் 5 மற்றும் 6ம் தேதிகளில் நடைபெறுவதால் அனைத்துப்

பங்குகளிலிருந்தும் பாலகர் முதல் ஏழாம் வகுப்பு வரையுள்ள அனைத்துக் குழந்தைகளையும் அழைத்து வர வேண்டும்.

2. கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகள் அனைத்துக் குழந்தைகளுக்கும் வழங்கப்படும். அந்த வாழ்த்து அட்டைகளை பெற்றுக் கொண்டு அதன் உறையில் காணிக்கைகள் வைத்து அதனை அலுவலகத்தில் திரும்ப ஒப்படைக்க வேண்டும்.
3. வட்டார அமைப்பாளர்கள் அந்தந்த வட்டாரப் பங்குகளில் சென்று பார்வையிட்டு மார்ச் 31க்கு முன் அறிக்கைத் தர வேண்டும்.
4. கருத்தரங்குகள் நடத்தாத மறைவட்டங்களில் கருத்தரங்கு நடத்துவதற்கான தேதியை தெரிவிக்க வேண்டும்.
5. கிறிஸ்துமஸ் கூடுகை 07-12-2015 அன்று படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில் வைத்து நடைபெறும்.
6. கலைவிழாப் போட்டிகளுக்கான பெயர்பட்டியல் 16-01-2016க்கு முன் கல்லுவிளை அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

இறுதியாக நன்றிப்பாடலுடனும் இறை ஆசியுடனும் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

இவண்,
சகோ. **ஹேமா**, செயலர்.

## BIRTHDAYS AND FEASTDAYS OF REV. FATHERS

| | |
|---|---|
| Rev. Fr. Felix SDB | December 09 |
| Rev. Fr. Anithottam Joseph C.M.I. | December 18 |
| Rev. Fr. Antony Jose | December 18 |
| Rev. Fr. Matheus Robert | December 26 |
| Rev. Fr. Peedikayil Rony MCBS | December 26 |
| **FEASTDAYS** | |
| Rev. Fr. John Thekkel | December 27 |
| Rev. Fr. John Kulathumkal | December 27 |

# சிறுமலர் மிஷன்லீக்

**நம்பிக்கை நடைபயணம்**

சிறுமலர் மிஷன்லீக் இயக்கம் சார்பில் நம்பிக்கை நடைபயணம் 2015-ம் ஆண்டு நவம்பர் 1-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அண்ணிக்கரை புனித மத்தேயு ஆலயத்திலிருந்து புறப்பட்டு சுமார் 4.00 மணியளவில் படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில்



நிறைவடைந்தது. நடைபயணத்தை நடத்த மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் செபித்து மிஷன்லீக் கொடியை அசைத்து தொடங்கி வைத்தார்கள். மேதகு ஆயர் அவர்கள் முன் நடக்க, குருகுலமுதல்வர், இயக்குநர், மிஷன்லீக் பொறுப்பாளர்கள் ஆகியோரைத் தொடர்ந்து, சிங்காரி மேளம், படந்தாலுமூடு, மஞ்சாலுமூடு, நித்திரவிளை, தக்கலை - பிலாங்காலை, சூசைபுரம், ஆறுகாணி, செங்கோட்டை மிஷன் ஆகிய மறைவட்டங்களைச் சார்ந்த உறுப்பினர்கள் என்ற வரிசைப்படி மிஷன்லீக் விருதுவாக்குகளை கூறிக் கொண்டு நடைபயணத்தை அலங்கரித்தனர்.

அனைத்து சிறுமலர்களும் கையில் சிவப்பு மஞ்சள் வண்ணக் கொடிகளேந்தியும், விருதுவாக்குகள் பொறித்த வண்ண அட்டைகளைக் கைகளில் ஏந்தியும், புனிதர்களைப் போல் வேடமணிந்தும், விருதுவாக்குகளைச் சொல்லிக் கொண்டும் இருவரிசையாக சீருடை அணிந்து நடை பயணத்தைத் தொடர்ந்தனர். சுமார் 1800 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நடைபயணத்தின் மையக்கருத்தாகிய 'கிறிஸ்தவ வாழ்வும்

சவால்களும்' என்ற சிந்தனையின் அடிப்படையில் சமூகத்தில் ஏற்படும் பிரச்சனைகளை மையப்படுத்தி ஒவ்வொரு மறைவட்ட வாகனங்களும் நடைபயணத்தை அலங்கரித்தன. நடைபயணம் திரு இருதய ஆலயத்தை வந்தடைந்தவுடன் இயக்குநர் அருட்தந்தை ஷோஜோ இருபத்தஞ்சில்சிற அவர்களால் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது. கூட்டத்தின் தொடக்கமாக இறைவணக்கம் சூசைபுரம் மறைவட்ட உறுப்பினர்களால் சிறப்பிக்கப்பட, தேசிய அமைப்பாளர் திரு. ஞானதாஸ் அவர்கள் தொடக்க உரையாற்றினார்கள். தொடர்ந்து ஆயர் அவர்கள் நமது விசுவாச வாழ்வு வளர மிஷன்லீக் இயக்கம் ஆணிவேரும் அச்சாணியுமாகத் திகழ்கிறது. அதைப்பேணிக்காக்க நாம் பாடுபடவேண்டும் என்றும், நமது மறைமாவட்டப் பிள்ளையாகிய செங்கோட்டை மிஷன் உறுப்பினர்களும் தந்தையர்களும் கன்னியர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தது இவ்வாண்டு நமக்குக் கிடைத்த மிகப்பெரிய மகிழ்ச்சி என்றும் கூறி, அவர்களை மேடைக்கு வரவழைத்து சிறப்பான வரவேற்பும் பரிசும் வழங்கி சிறப்பித்தார். பின்னர் நமது மறைமாவட்ட மாத இதழாகிய சிறுமலர் மாத இதழை மேதகு ஆயர் அவர்கள் வெளியிட முதல் பிரதியை குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

பின்பு பேரணியின் இறுதிப் பகுதியான பரிசு வழங்குதல் நடைபெற்றது. முதல் பரிசை படந்தாலுமூடு மறைவட்டமும், 2-ம் பரிசை சூசைபுரம் மறைவட்டமும், 3-ம் பரிசை நித்திரவிளை மறைவட்டமும் பெற்றன. பின்னர் மறைமாவட்ட இயக்குநர் தந்தை அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். இறுதி ஜெபத்துடன் நித்திரவிளை மறைவட்டம் பாப்பரசர் கீதம் பாட தேனீர் விருந்துடன் நிகழ்வு இனிது நிறைவு பெற்றது.

## II. பொறுப்பாளர்கள் கூட்டம்

மிஷன்லீக் பொறுப்பாளர்களின் 5-வது கூட்டம் படந்தாலுமூடு திரு இருதய ஆலய வளாகத்தில் 10.11.2015 செவ்வாய்க்கிழமை மதியம் 2 மணிக்கு நடைபெற்றது. இயக்குநர் தந்தை அவர்கள் தொடக்க

ஜெபத்துடன் அனைவரையும் வரவேற்றார் . செயலர் அறிக்கை வாசித்தபின் தந்தை அவர்கள் 01.11.2015 அன்று நடந்த நடைபயணம் பற்றிய கருத்துக்களை எடுத்துக்கூறியதோடு கலந்து கொண்டு சிறப்பித்த, பொருளுதவி மற்றும் பலவழிகளில் உதவிய அனைவருக்கும் நன்றி கூறினார்கள். அதன்பின்பு நடைபயணம் பற்றிய மதிப்பீடு நடைபெற்றது.

பேரணி தொடங்கிய பின்பு இடையில் வந்து சேர்தல்

போக்குவரத்து நெரிசல்

இடவசதியின்மை (தொடங்கும் இடம் முடியும் இடம்)

அதி வேகம் - நடை பயணம்

தேனீர் வழங்குதல் - ஒவ்வொரு மறைவட்ட உறுப்பினர்களையே ஒப்படைத்தல் நன்று.

பொதுக்கூட்ட நேரம் குறைத்தல்.

அனைத்து அருட்தந்தையர்களும் கலந்து கொள்ளுதல்

போன்றவை ஒரு தீர்மானமாக எடுக்கப்பட்டதோடு நடைபயணத்தின் நிறைகளும் எடுத்துரைக்கப்பட்டன. பின்னர் அடுத்த வருடம் எந்த பங்கிலிருந்து தொடங்கி எங்கு முடிப்பது என்றும் இன்னும் சிறப்பாக நடத்த என்னென்ன செய்யலாம் என்றும் ஆலோசிக்கப்பட்டது.

பின், சிறுமலர் மாத இதழ், நமது மறைமாவட்ட இதழ் என்பதை உணர்ந்து படைப்புகளை நாமே உருவாக்கி இதழைச் சிறப்பிக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மறைவட்டமாக அந்த பொறுப்பை ஏற்பது நன்று என்றும் இயக்குநர் கூறினார். தொடர்ந்து, 2016-ம் ஆண்டு ஜனவரி மாத இதழ் நித்திரவிளை மறைவட்டமும் அடுத்த மாத இதழ்கள் சூசைபுரம், படந்தாலுமூடு, ஆறுகாணி, தக்கலை - பிலாங்காலை மறைவட்டங்களும் ஒரு தலைப்பை மையமாக வைத்து எழுத வேண்டும் என்றும் ஒரு பிரதியின் விலை ரூ.6 என்பதையும் தெரிவிக்க அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

இறுதியாக ஜெபத்துடனும் இறை ஆசீருடனும் கூட்டம் இனிது நிறைவுற்றது.

வாழ்க குழந்தை தெரசா புகழ்! வளர்க சிறுமலர் மிஷன்லீக்!!

இவண்,

செயலர்.

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

**வர்ணம் 2015**

குழந்தைகள் தினத்தையொட்டி கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தால் நடத்தப்பட்ட **"வர்ணம் 2015"** ஓவிய போட்டியானது நவம்பர் மாதம் 9- ம் தேதியன்று ஆசீர் திருமணமண்டபத்தில் வைத்து சுமார் 9.00 மணியளவில் பெயர் பதிவுடன் ஆரம்பிக்கப்பட்பது. இதனை தக்கலை மறைமாவட்ட மேய்ப்பு பணி பேரவை உறுப்பினர் திரு. மரியதாஸ் அவர்கள் குத்து விளக்கேற்றி



துவங்கி வைத்தார். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 20 பள்ளிகளிலிருந்து 300 மாணவர்கள் இப்போட்டியில் கலந்துக் கொணடார்கள். IV முதல் VI வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு 'குழந்தைகள் தினம்' என்ற தலைப்பில் ஓவியம் வரைதல் போட்டியும், VII முதல் X வரையிலான மாணவர்களுக்கு 'குழந்தைகள் மற்றும் இயற்கையும்' என்ற தலைப்பில் சுவரொட்டி வடிவமைத்தல் போட்டியும் நடைபெற்றது. முதல் மூன்று இடங்கள் பிடித்த மாணவர்களுக்கு பரிசுத் தொகையும் சான்றிதழும் வழங்கப்பட்டது. மேலும் சிறப்பாக வரைந்த மாணவர்கள் கௌவுரவிக்கப்பட்டார்கள். அருட்தந்தை சோஜோ அவர்களால் மாணவர்களுக்கு திறமைகளை வளர்ப்பதைப் பற்றி பயிற்சி வழங்கப்பட்டது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார்கள். கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் தந்தை சஜி எலம்பசேரில் அவர்கள் கலந்துக்கொண்டு சிறப்பித்தார்கள். திருமதி வல்சலா அவர்கள் நன்றியுரையுடன் நிகழ்வானது இனிதே முடிவடைந்தது.

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

### குடிநோயாளிகளை ஆற்றுப்படுத்தல் பயிற்சி

அர்ப்பண வாழ்வு ஆண்டினை முன்னிட்டு சிறப்புப் பயிற்சியானது கல்லுவிளை TCYM PHD பயிற்சி மையத்தில் வைத்து நவம்பர் 19,20,21 ஆகிய நாட்களில் நடைபெற்றது. சுமார் 24 பேர் கலந்து கொண்டனர். குடியை ஒரு நோயாகவும்,



குடிப்பவர்களை நோயாளியாகவும் பார்க்க கற்றுக் கொண்டார்கள், குடியை பாவபட்டியலில் இருந்து, நீக்கிவிட்டு நோய்பட்டியலில் சேர்க்க வேண்டும் என்பதை உணர்ந்தார்கள், குடிநோயாளிகள் தண்டனைக்கும், அறிவுரைக்கும் உரியவர்கள் அல்ல! மாறாக மறுவாழ்வையும் மருத்துவத்தையும் நாடியிருப்பவர்கள். இந்த பார்வையோடு அணுகுவது எப்படி என்பதை பற்றியும் அவர்களை மறுவாழ்வுக்காக அழைக்க தேவையான யுக்திகளையும் கற்று கொண்டார்கள். சமூக அக்கறை கொண்ட திரைப்படங்கள் மூலமாக குடிநோயின் கொடுமைகளையும், குடிநோயாளிகளின் பரிதாப நிலையையும் அறிந்து கொண்டார்கள். இந்த பயிற்சியை அருட்தந்தை செபி CMI கோயம்புத்தூர் அவர்களும், செல்வி ஷீலா அவர்களும் வழிநடத்தினார்கள் குடிநோய்க்கு எதிராக மக்கள் இயக்கமாக மாற செயல்திட்டங்கள் வகுக்க தந்தை செபி அவர்கள் அழைப்பு விடுத்தார். இதன் அடிப்படையில் அர்ப்பண வாழ்வு பணிக்குழு ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை பெலிக்ஸ், வருகை தந்த சகோதரிகளோடு கலந்துரையாடி மார்ச் 8 தேதி, பெண்கள் தினத்தை, “மது இல்லா மறைமாவட்டம்” என்ற தலைப்பில் சிறப்பிக்க திட்டமிடப்பட்டது.

## கிறிஸ்துமஸ் சிறப்பு நிகழ்ச்சி

**பஜனை பாடல் போட்டி**

22.11.2015 அன்று நடைபெற்ற TCYM தலைவர்கள் கூட்டத்தில் டிசம்பர் மாதம் பஜனைப்பாடல் போட்டி நடத்த வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

நாள் : 20.12.2015 மதியம் 1 மணி

இடம் : திருஇருதயமறைவட்ட ஆலயம், படந்தாலுமூடு.

**நிபந்தனைகள்**

i) ஒவ்வொரு மறைவட்டமும் ஒரு குழுப்பாடல் மட்டுமே பாடவேண்டும்.

ii) குழுவில் குறைந்தது 10 பேர், அதிகப்பட்சம் 20 பேர் கலந்து கொள்ளலாம்.

iii) ஒரே பங்கிலிருந்து 4 பேருக்கு மேல் குழுவில் இடம்பெறுதல் கூடாது.

iv) அவரவர் விருப்பத்திற்கேற்ப இசைக்கருவிகள் கொண்டு வந்து பயன்படுத்தலாம்.

v) பதிவு செய்யப்பட்ட (Pendrive, CD, Floppy) இசைக்கலவை பயன்படுத்த அனுமதியில்லை.

vi) திரைப்பட பாடல்மெட்டிலும் பாடலாம்.

**இளைஞர்களுக்கான திறன்வளர் பயிற்சி**

இளைஞர்களின் திறமையை கூடுதலாக வளர்க்கவும் சமூக ஊடகங்களை சரியாக புரிந்து கொள்ளவும், சரியான வகையில் பயன்படுத்தவும் முறையான பயிற்சிகள் தேவைப்படுகின்றன. இதில் முதல் கட்டமாக அறிமுகப் பயிற்சியானது நம்முடைய இளைஞர்களுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது.

பயிற்சிகள் நடைபெற்ற விவரம்

| இடங்கள் | நாள் | பங்கேற்றோர் |
|---|---|---|
| 1. முழுக்கோடு | 08.11.2015 | 30 |
| 2. வயிலன்கரை | 22.11.2015 | 15 |
| 3. நித்திரவிளை | 22.12.2015 | 10 |


நித்திரவிளை மறைவட்ட இளைஞர்களுக்கான ஒருநாள் திறன் வளர் பயிற்சி கருத்தமர்வு 29-11-2015 அன்று நித்திரவிளை அமலா அரங்கத்தில் நடைபெற்றது. 9.30 மணியளவில்



பெயர்ப்பதிவு தொடங்கியது. 10 மணியளவில் ஆரம்ப செபத்துடன் இளைஞர்களுக்கான குடிநோய் பற்றிய விழிப்புணர்வு வகுப்பு நடைபெற்றது. இதில் 112 இளைஞர்கள் கலந்து கொண்டனர். குடி நோயால் ஏற்படும் விளைவுகளைப் பற்றித் தெரிந்து கொண்டார்கள். இந்த பயிற்சியை திரு.ரமேஷ், திரு.கவிராஜ், திருமதி. விமலா ஆகியோர் வழிநடத்தினார்கள். 12.30 மணிக்கு திருப்பலியோடு காலை அமர்வு நிறைவுற்றது. மதியஉணவுக்குப்பின 2.30 மணியளவில் இளைஞர்களுக்கான கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கலைநிகழ்சிகளின் முடிவில் மதுவை குடிக்கமாட்டோம் என்று அனைத்து இளைஞர்களும் உறுதிமொழி எடுத்தனர். நித்திரவிளை மறைவட்ட இளைஞர் இயக்கத் தலைவர்கள் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி பற்றி கலந்தாலோசனை செய்தார்கள். பின்பு தேநீர் வழங்கப்பட்டது. இக்கூட்டத்தை, இயக்குநர் அருட்தந்தை பெலிக்ஸ் Sdb அவர்கள் வழிநடத்தினார். பின்பு 4 மணியளவில் இந்த வகுப்பு இறுதி ஜெபத்துடன் நிறைவடைந்தது.

செல்வி **ஷிபி**, தன்னார்வத் தொண்டர்.

**Pope Francis**
# TWEETS



**Pope Francis** @Pontifex Nov 29
I come to the Central African Republic as a pilgrim of peace and as an apostle of hope.

# புனித வின்செண்ட் தே பவுல் சபை

## காரோடு தேவசகாயம் நல்வாழ்வு நிலையம் - சந்திப்பு

8.11.2015 அன்று ஞாயிற்றுக்கிழமை சூசைபுரம் வட்டார சபையின் வின்செந்திய பொறுப்பாளர்கள் மற்றும் கிளைச்சபையின் உறுப்பினர்கள் அனைவரும் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை. ஆன்றணி ஜோஸ் அவர்களின் ஆலோசனை பேரிலும், வட்டார சபைத் தலைவர் சகோ. சோனிக் ரீகன் அவர்கள் வழிகாட்டுதலின் படியும் காரோடு தேவசகாயம் நல் வாழ்வு நிலையத்திற்கு உதவிபுரியும் நோக்கத்துடன் வின்செந்திய எழுச்சிப் பயணம் நடைபெற்றது. இதில் சுமார் முப்பது பேர் பங்கெடுத்தனர். அங்குள்ள அருட்கன்னியர்கள் மற்றும் இயக்குநர் அருட்தந்தை தாமஸ் தக்கலை அவர்களும் மனநோயாளிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் வண்ணம் செயல்படுகின்றனர். இது வின்செந்தியர்களுக்கு ஒரு புது அனுபவமாக அமைந்திருந்தது. இச்சந்திப்பில் தக்கலை மத்திய சபையின் செயலாளர் சகோ. எட்வின்சன் மற்றும் வட்டார சபை துணைத்தலைவர் சகோ. லாறன்ஸ் ஆகியோர் கலந்துகொண்டு அனைவரையும் வழிநடத்தினார்கள். சூசைபுரம் வட்டார சபையின் பொருளாளர் சகோ. பிரபு அவர்கள் உதவி தொகையை வழங்கினார். மனநோயாளிகளுடன் சந்திப்பு மற்றும் செபத்துடன் இப்பயணம் அனைவருக்கும் பயனுள்ளதாக அமைந்திருந்தது.



இவண்

சகோ. ஹேமா, செயலர்

# இல்வாழ்வு இயக்கம்

**மாதர் ஜோதிஸ்**

மாதர் ஜோதிஸின் டிசம்பர் மாதச் சிந்தனை, 'குழந்தைகள் தினம்' (டிசம்பர்-28) ஆகும்.

**சிந்தனை தலைப்புகள்**

- குழந்தைகள் கடவுளின் கொடை.
- சின்னக்குடும்பமா? பெரியக் குடும்பமா? இதில் ஆசீர்வாதமானது எது?
- இன்றையக் குழந்தைகளுக்குத் தேவையானவை எவை?

**பணிகள்**

ஆதரவற்ற குழந்தைகளின் இல்லத்தைச் சந்தித்து உதவி வழங்குதல்.

**போட்டி**

கிறிஸ்துமஸ் தின்பண்டம் தயாரித்தல்.

**திருக்குடும்பத் திருநாள்**

டிசம்பர் 27 ஞாயிறன்று திருக்குடும்பத் திருநாளை கடந்த ஆண்டைப் போன்று இவ்வாண்டும் சிறப்பாகக் கொண்டாட நினைவூட்டுகிறேன். அதற்கான வழிகாட்டுதல் கீழேக் கொடுக்கப்பட்டுள்ளது.

*ஒவ்வொரு உறவியமும் பவனியாக ஆலயத்தில் வரவும்.

*குடும்பமாக நின்று ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்தல்

*குடும்பமாக காணிக்கை செலுத்தி, தகுந்த தயாரிப்புடன் தேவநற்கருணை உட்கொள்ளல்.

*திருப்பலிக்குப் பின் தனிப்பட்ட செபம் செய்து, இறுதி ஆசீரும் பெறுதல்.

*இறை இரக்கத்தின் ஆண்டை முன்னிட்டு பங்குத்தந்தை பங்குமக்களிடமும், பங்குமக்கள் பங்குத்தந்தையிடமும், பெற்றோர், பிள்ளைகள் அனைவரும் ஒருவருக்கொருவர் மன்னிப்பதும்,

மன்னிப்புக் கேட்பதும் நன்றாகும்.

*அந்தந்தப் பங்குகளில் விருப்பமான போட்டி நடத்தி பரிசு வழங்குதல்.

*அன்பின் விருந்து, அல்லது உணவுத்திருவிழா நடத்துதல்.

**மாதர் ஜோதிஸ் ஆண்டுவிழா**

மாதர் ஜோதிஸ் ஆண்டுவிழாவானது 2016 ஜனவரி 3 ஞாயிற்றுக்கிழமை மதியம் 2 மணிமுதல் மாலை 4.30 மணிவரை கல்லுவிளையில் நடைபெறும். மதியம் 2 மணிக்கு வினாடிவினா போட்டியின் இறுதிச் சுற்றும் அதனைத் தொடர்ந்து ஆண்டுவிழாவும் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மிகச்சிறந்த மாதர் ஜோதிஸ் அலகு, இயக்குநர், ஒருங்கிணைப்பாளர், சிறந்த வீரச்செயல்புரிந்த தாய் ஆகியோர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு கௌரவிக்கப்படுவார்கள். மேலும் திருமண உதவி, சிறப்புரை, மாதர்ஜோதிஸ் இயக்கத்தின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் தேனீர் விருந்துடன் நிறைவுபெறும்.

2016 ஆம் ஆண்டின் செயல்திட்ட நிகழ்வுகள், அன்றைய நாள் ஒவ்வொரு அலகுக்கும் வழங்கப்படும்.

**திருமண தயாரிப்புப் பயிற்சி**

2015 நவம்பர் மாதம் நடைபெற்றப் பயிற்சியில் 30 உறுப்பினர்கள் பங்கெடுத்தனர்.

பங்குபெற்ற மறைவட்டங்களும் உறுப்பினர்களும்.

| | | |
|---|---|---|
| மஞ்சாலுமூடு மறைவட்டம் | - | 16 |
| படந்தாலுமூடு மறைவட்டம் | - | 5 |
| நித்திரவிளை மறைவட்டம் | - | 6 |
| தக்கலை பிலாங்காலை மறைவட்டம் | - | 1 |
| சூசைபுரம் மறைவட்டம் | - | 1 |
| ஆறுகாணி மறைவட்டம் | - | 1 |

அடுத்த பயிற்சி 2016 ஜனவரி 3ம் வாரம் நடைபெறும். பதிவுக்கட்டணம் 500 ரூபாய்.

**வந்து பாருங்கள் செபக்குழு**

வந்து பாருங்கள் செபக்குழுவின் வழிகாட்டுதலில் நடைபெற்ற 101வது ஒருநாள் தியானம் நவம்பர் மாதம் 10ஆம் தேதி இரண்டாவது சனிக்கிழமை அன்று பளுகல் பங்கில் வைத்து நடைபெற்றது. சகோ.அப்பு கோதமங்கலம் அவர்களால் இறைச்செய்தி வழங்கப்பட்டு மதியம் 2 மணிக்கு அன்பின் விருந்து அளிக்கப்பட்டு இத்தியானம் முடிவடைந்தது.

15வது மறைமாவட்ட கன்வென்ஷனின் தயாரிப்பாக வந்து பாருங்கள் செபக் குழுப் பணியாளர்கள் சென்று எல்லாப் பங்குகளிலும் கன்வென்ஷன் என்று அறிவித்ததோடு, நோட்டீஸ் வழங்கி விளம்பர போர்டுகளும் கட்டினார்கள். ஒவ்வொரு பங்கிலிருந்தும் ஒரு வாகனத்திலாவது, அருட்தந்தையர்கள் முயற்சியெடுத்து இறை மக்களை அழைத்து வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**தசாம்ச கிளப்**

சகோ. சசி நெய்யாற்றின்கரை அவர்களின் இல்லத்தில் வைத்து நடைபெற்ற நவம்பர் மாத கூடுகையில் கிடைக்கப்பெற்ற தசமத் தொகை காருண்ய உதவி நிதியில் சேர்க்கப்பட்டது.

**தந்தையர் நல்வாழ்வு இயக்கம்:**

அனைத்துப் பங்குகளிலும் தந்தையர் நல்வாழ்வு இயக்கம் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## FAMILY APOSTALATE

**മാതൃജ്യോതിസ്:**

ഡിസംബർ മാസ പഠനവിഷയം :- കുഞ്ഞിപൈതങ്ങൾ ദിനം

ഡിസംബർ 28 :- കുഞ്ഞുങ്ങൾ ദൈവദാനം

- ചെറിയ കുടുംബമോ, വലിയ കുടുംബവമോ അതികം ?
- ഇന്നത്തെ കുഞ്ഞുങ്ങൾക്ക് വേത് ?

**ദൗത്യം**

കുഞ്ഞുങ്ങളുടെ ഒരു അനാഥാലയം സന്ദർശിച്ച് വേത് നൽകുക.

**മത്സരം:**

ഒരു ക്രിസ്തുമസ്സ് വിഭവം (പലഹാരം) ഉാക്കി കൊുവരിക.

**തിരുക്കുടുംബദിനം:**

(ഡിസംബർ 27 ഞായർ) കഴിയ വർഷത്തേതുപോലെ ഈ വർഷവും തിരുക്കുടുംബദിനം സമുചിതമായി ആചരിക്കണമെന്ന് സ്നേഹപൂർവ്വം ഓർമ്മിപ്പിക്കുന്നു. അതിനുള്ള നിർദ്ധേശങ്ങൾ താഴെ നൽകുന്നു.

ഉറവിയ അടിസ്ഥാനത്തിൽ പള്ളിയിലേക്ക് റാലിയായി വരിക.

പള്ളിയിൽ കുടുംബം, കുടുംബമായി നിൽക്കുക, കുടുംബമായി കാണിക്കയിടുക, കുടുംബമായി വിശുദ്ധ കുർബാന സ്വീകരിക്കുക.

വി.കുർബാനക്കു ശേഷം പ്രത്യേക പ്രാർത്ഥനയും, ആശീർവാദങ്ങളും നടത്തുക.

കരുണയുടെ വർഷം പ്രമാണിച്ച് വൈദികൻ ജനങ്ങളോടും, തിരിച്ചും, അപ്പൻ, അമ്മ, മക്കൾ പരസ്പരവും ജീവിക്കുന്നതും ക്ഷമ ചോദിക്കുന്നതും നല്ലതാണ്.

ഉചിതമായ മത്സരങ്ങൾ നടത്തുക., സമ്മാനദാനം നൽകുക.

സ്നേഹവിരുന്നു നടത്തുകയോ, ഭക്ഷണ സ്റ്റാൾ നടത്തുകയോ ചെയ്യുക.

**മാതൃജ്യോതിസ് വാർഷികം:**

മാതൃജ്യോതിസ് വാർഷികം 2016 ജനുവരി 3 ഞായറാഴ്ച്ച കല്ലുവിള ആഡിറ്റോറിയത്തിൽ 2 മുതൽ 4.30 വരെ നടക്കും 2 മണിക്ക് ക്വിസ് മത്സരത്തിന്റെ ഫൈനൽ മത്സരം നടക്കും. തുടർന്ന് വാർഷികവും

ഏറ്റവും നല്ല യൂണിറ്റ്

ഏറ്റവും നല്ല ഡയറക്ടർ

ഏറ്റവും നല്ല ആനിമേറ്റർ

ശ്രേഷ്ടവും ധീരവുമായ പ്രവർത്തി ചെയ്യുന്ന അമ്മക്ക് അവാർഡ്

വിവാഹ സഹായം

കലാപരിപാടികൾ, സന്ദേശം എന്നിവയുമാകും

– 2016 ലെ മാർഗ്ഗരേഖ അന്നു നൽകപ്പെടുന്നതാണ്.

**പ്രീ–പ്രൈമറി ഗൈഡൻസ് കോഴ്സ്**

2015 നവംബർ മാസം നടന്ന കോഴ്സിൽ 30 പേർ പങ്കെടുത്തു.

| | |
|---|---|
| മഞ്ചാലിമൂട് ഫൊറോന | – 16 പേർ |
| പടന്താൽ ഫൊറോന | – 5 പേർ |
| നിദ്രവിള ഫൊറോന | – 6 പേർ |
| തക്കല-പ്ലാങ്കാല | – 1 |
| സൂസൈപുരം ഫൊറോന | – 1 |
| ആറുകാണി ഫൊറോന | – 1 |

അടുത്ത കോഴ്സ് 2016 ജനുവരി 3-ാമത്തെ വാരം നടക്കും.

**വന്തു പാരുങ്കൾ പ്രാർത്ഥനാ ഗ്രൂപ്പ്**

പ്രാർത്ഥനാ ഗ്രൂപ്പിന്റെ ആഭിമുഖ്യത്തിൽ 101–ാമത് ഏകദിന ധ്യാനം നവംബർ 2–ാം ശനിയാഴ്ച്ച പളുങ്കൽ ചർച്ചിൽ വച്ചു നടന്നു. ബ്ര: അപ്പു കോതമംഗലം ശുശ്രൂഷകൾക്ക് നേതൃത്വം നൽകി. 2 മണിക്ക് സ്നേഹവിരുന്നോടെ ധ്യാനം അവസാനിച്ചു.

15–ാമതു മറൈമാവട്ട കൺവെൻഷന് ഒരുക്കമായുള്ള എല്ലാ പങ്കുകളിലും ശുശ്രൂഷകർ പോയി അറിയിക്കുകയും നോട്ടീസ് നൽകുകയും ഫ്ളക്സ് കൊടുക്കുകയും ചെയ്തു. ഓരോ പങ്കിൽ നിന്നും ഓരോ വി ഏർപ്പാടാക്കി ദൈവജനം കൃത്യമായി വരണമെന്ന് ഓർമ്മിപ്പിക്കുന്നു.

**ദശാംശ ക്ലബ്:**

നവംബർ മാസ ദശാംശക്ലബ് യോഗം സഹോദരൻ ശശി നെയ്യാറ്റിൻകരയുടെ ഭവനത്തിൽ കൂടി. ദശാംശം ജീവകാരുണ്യ പ്രവർത്തനത്തിനായി ഫിൽ നിക്ഷേപിച്ചു.

**തന്നയർ നൽവാഴ്വ് ഏക്കം:**

എല്ലാ പങ്കുകളിലും തന്നയർ നൽവാഗ്ദാനം ഏക്കം യൂണിറ്റ് സ്ഥാപിക്കണമെന്ന് ഓർമ്മിപ്പിക്കുന്നു.

**ഫാ. ജോസഫ് നെടുംപുറം**
ഡയറക്ടർ

# சூசைபுரம் புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி

**தேர்வுகள்**

2.11.2015 அன்று பல்கலைகழக அளவிலான தேர்வுகள் நம் கல்லூரியில் தொடங்கி நடத்தப்பட்டன.

**போட்டிகளும், பரிசும்**

1.11.2015 அன்று பாரத கலாசாரப் பேரவை சார்பில் மார்த்தாண்டம் வர்த்தகர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையிலான பேச்சுப்போட்டியில் நமது சல்லூரி முதலாமாண்டு ஆங்கிலத் துறை மாணவி C.R. ஜெனிசா இரண்டாவது இடமும் கணிதத்துறை இரண்டாமாண்டு மாணவி S. சோனியா மூன்றாமிடமும் பெற்றுப் பெருமை சேர்த்தனர்.



17.11.2015 அன்று குமரி முத்தமிழ் மன்றம் சார்பாக மார்த்தாண்டம் ஸ்டேன்டர்டு திருமண மண்டபத்தில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் நமது கல்லூரி இரண்டாமாண்டு கணிதத்துறை மாணவி S. சோனியா மூன்றாம் பரிசினைப் பெற்று பாராட்டும் பெற்றார்.

5.12.2015 அன்று நாகர்கோவில் ரோட்டரி அரங்கத்தில் கன்னியாகுமரி மாவட்ட பிரஸ்கிளப் சார்பாக நடைபெற்ற போட்டிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இப்போட்டிகளில் கவிதைப் போட்டியில் நமது கல்லூரி முதலாமாண்டு கணிதத்துறை மாணவி M. ஷாலினி முதல் பரிசும், கட்டுரைப் போட்டியில் முதலாமாண்டு ஆங்கிலத்துறை மாணவி C.R. ஜெனிசா முதல் பரிசும், முதலாமாண்டு

வணிகவியல் துறை மாணவன் S.D. ஆல்வின் போஸ் மூன்றாம் பரிசும், ஓவியப் போட்டியில் இரண்டாமாண்டு கணிதத்துறை மாணவி S.V. அஜின்சி முதல் பரிசும், சந்தியா ஆறுதல் பரிசும் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.

பரிசுபெற்ற மாணவ மாணவியரை கல்லூரி தாளாளர், முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் பாராட்டினார்கள்.

Fr. ஆன்றணி ஜோஸ்,
இணைத்தாளாளர்.

---

## அருட்சகோதரர்களிடமிருந்து....

இறையன்பில் யாவருக்கும் வாழ்த்துக்கள்.

அனைவருக்கும் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

அருட்சகோதரர்கள் அனைவரும் நலமுடன் உள்ளனர். உங்கள் மன்றாட்டின் பலனாக இறைவன் எங்களுக்களிக்கும் நலனுக்காக நாங்கள் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

திருத்தொண்டர் றிட்டோ தூம்புங்கல் தன்னுடைய களப்பணியினை கல்லுவிளை சமூக சேவை மையத்தில் நிறைவு செய்து, நவம்பர் 15 அன்று விடுமுறை பெற்று தன்னுடைய அருட்பொழிவிற்கான ஆன்மீக தயாரிப்புகளை நடத்தி வருகிறார். அவருக்கு எல்லாவித வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறோம். அவர் தற்போது மற்ற திருத்தொண்டர்களோடிணைந்து தியானத்தில் ஈடுபட்டுள்ளார்.

நமது மறைமாவட்டத்திலுள்ள நான்கு திருத்தொண்டர்களும் நம்பர் 10-ம் தேதி முதல் தங்களுடைய குருத்துவக் கல்லூரி வாழ்வை பூர்த்தியாக்கி, மறைமாவட்டத்தில் களப்பணியைத் தொடங்கியுள்ளனர். சிறப்பாக, திதொ. அனில் ராஜ், முக்கூட்டுக்கல் இளங்குருத்துவக் கல்லூரியிலும் தி.தொ. அஜின் ஜோஸ் கல்லுவிளை சமூக சேவை மையத்திலும் திதொ. சாமுவேல் மஞ்சாலுமூடு குழந்தை தெரசா மறைவட்ட ஆலயத்திலும் திதொ. ஜஸ்டின் சுதீஷ் நித்திரவிளை ஜெயமாதா மறைவட்ட ஆலயத்திலும் செயல்படுகின்றனர்.


மற்ற எல்லா அருட்சகோதரர்களும் நலமுடன் உள்ளனர். களப்பணியாற்றும் இருவரும் (Toji & Liju) நன்முறையில் செயல்படுகின்றனர். உஜ்ஜெயின் கல்லூரியில் பயிலும் மூவரும் நலமுடன் இருப்பதோடு, கிறிஸ்துமஸ் விடுமுறையின் போது வெவ்வேறு மறைத்தொண்டு தளங்களுக்கு உதவிட செல்லவிருக்கின்றனர். ( உஜ்ஜெயின் மறைமாவட்டத்திற்கு உட்பட்ட இடங்கள்) மற்ற சகோதரர்கள் படிக்கும் இடமும் விடுமுறையும்,

| பெயர் | படிக்குமிடம் | விடுமுறை நாள் |
|---|---|---|
| Bro. Aju & George kutty | Banglore | 23.12.2015 |
| Bro. Jebanesh & Albin Jose | Thrissur | 20.12.2015 |
| Bro. Vinu D & Jose Purayidathikunnel | Kottayam | 20.12.2015 |
| Bro. Makesh | Kunnooth | 19.12.2015 |
| Bro. John Joseph | Satna | 23.12.2015 |
| Bro. Jini Agnal | Warangal | 23.12.2015 |

எல்லா இறைமக்களுக்கும் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

அருட்சகோ. **வினு,**
அருட்சகோதரர் தலைவர்.

## Pope Francis TWEETS



**Pope Francis** @Pontifex Nov 30
Christians and Muslims are brothers and sisters, and we must act as such.



**Pope Francis** @Pontifex Nov 29
The Jubilee Year of Mercy reminds us that God is waiting for us with open arms, just like the father of the prodigal son.



**Pope Francis** @Pontifex Nov 29
Where there is violence and hatred, Christians are called to witness to the God who is Love.

# செங்கோட்டைச் செய்திகள்

**திருத்தொண்டுப் பணியின் கருத்தரங்கு**

மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் தேன்பொத்தை DSH கன்னியர் இல்லத்தில் வைத்து 18.11.2015 அன்று செங்கோட்டைப் பகுதியில் நடைபெறும் திருத்தொண்டுப் பணிகள் குறித்த கருத்தரங்கு நடைபெற்றது. அதற்கு முன்னோட்டமாக ஆயர் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. ஆயர் தமது மறையுரையில், நாம் சீரோமலபார்த் திருச்சபையின் தனித்தன்மை மாறாமல் அதன் அடிப்படையில் நற்செய்தி பணியைச் செய்ய வேண்டும். அதற்கு உகந்தவாறு தமிழ் மொழியை அனைவரும் கட்டாயம் கற்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்கள்.

ஆயரின் வேண்டுகோளுக்கிணங்க, புனித சூசையப்பர் மற்றும் புலரி பள்ளிக்கூடங்களில் அருட்தந்தையர்களுக்கும், அருட்கன்னியர்களுக்கும் தமிழ் பயில வகுப்புக்கள் தொடங்க ஆலோசிக்கப்பட்டு பின்னர் தொடங்கப்பட்டது. அதுபோல 8.12.2015-ல் திருத்தந்தையால் அறிக்கையிடப்பட போகின்ற "இறை இரக்க ஆண்டு" செயல்பாடுகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

**குழந்தைகள் தின விழா**

நவம்பர் 14 குழந்தைகள் தினத்தை முன்னிட்டு புலரி மற்றும் புனித ஜாண் பள்ளிக்கூடங்கள் சார்பில் செங்கோட்டை நகரப் பூங்காவிலிருந்து, புலரி சமூக சங்கம் அமைந்துள்ள எல்கை வரை சிறப்பானதொரு பேரணி நடைபெற்றது. தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி மேலாளர் கொடியசைத்து பேரணியை தொடங்கி வைத்தார்கள். அருட்தந்தை பீட்டர் கிழக்கேல் அடிகளார் நிறைவுரையாற்றினார்.

மாணவர்களின் கல்வியறிவை வளர்த்தும் விதமாக ஏற்கனவே செயல்பட்டுவந்த 4 டியூசன் சென்டர்கள் தற்போது 7 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அருட்தந்தை. லிஜோ தெக்கேல் அவர்களும் செங்கோட்டையில் நடைபெறும் பணிகளில் தன்னையும் ஈடுபடுத்திக்கொண்டுள்ளார். அக்டோபர் மாதம் செபமாலை மாதம், செங்கோட்டை மிஷனின் மேக்கரை மற்றும்

புளியரையில் வைத்து தனிநபர் ஆற்றுப்படுத்துதல் நற்கருணை ஆராதனை மற்றும் செபமாலை ஆகியவை நடைபெற்றன.

**பங்கேற்பு**

தக்கலை மறைமாவட்ட தினம் நவம்பர் 14-ல் கல்லுவிளையில் வைத்து நடைபெற்றது. அதில் செங்கோட்டையிலிருந்து சுமார் 26 பேர் கலந்து கொண்டு 'செங்கோட்டை சரித்திரம்' என்னும் தலைப்பில் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை நடத்தினார்கள்.

டிசம்பர் மாதம் படந்தாலுமூட்டில் வைத்து நடைபெற்ற மறைமாவட்ட இறைவார்த்தை கொண்டாட்டத்திலும் பலர் கலந்து கொண்டனர். இவ்வருட மறைபரப்பு ஞாயிறு காணிக்கைக்காக (1-25 வரையிலான குடும்பப் பிரிவில்) முதல் பரிசு மறைமாவட்ட ஆயரிடமிருந்து பெற்றுக் கொண்டதை, செங்கோட்டை மிஷன் மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றனர். எங்கள் மறைப்பரப்புப் பணிக்காக செபிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## In charges in Shengottai Mission works
**(திருத்தூதுப்பணியின் பொறுப்பாளர்கள்)**

**1. Catechism**

Fr. Peter Kizhakkel, Sr. Shiji DHS, Sr. Bindhu DHS

**2. Mission League**

Fr. Anto MCBS, Sr. Emili CMC

**3. Society of St.Vincent de Paul**

Fr. Rony Jose MCBS, Sr. Silvi CMC

**4. Mathrujothis**

Fr. Tobin Aalapuraickal, Sr. Anie DHS

**5. Youth Movement (TCYM)**

Fr. John Paul, Sr. Jaya Jose DHS

**6. Kulanthai Yesu Iyyakkam**

Fr. Jomy MCBS, Sr. Clare F.C.C

**7. Altarboys**

Sr. Alphonsa C.M.C

செங்கோட்டைப் பகுதியில் இன்னும் ஏராளம் மறைபரப்புப் பணிகள் நம்மை எதிர்நோக்கியிருக்கின்றன. மறைமாவட்ட மறைபரப்புப் பணியில் நாமும் இணைவோம்; நற்கனி கொடுப்போம்.

அருட்தந்தை. பீட்டர் கிழக்கேல்
ஒருங்கிணைப்பாளர்.

---

## பள்ளிக்கோணம் திருஇருதய ஆலயம்

### உறவியம் சார்பில் காரோடு மன நோயாளிகள் இல்லம் சந்திப்பு

பள்ளிக்கோணம் திரு இருதய ஆலயத்தின் புனித தோமையார் உறவியம் சார்பாக காரோடு தேவசகாயம் நல்வாழ்வு இல்லம் சந்திப்பு நடைபெற்றது. இதனை பங்குத்தந்தை அருட்தந்தை சாக்கோ அவர்களின் ஆலோசனையின் பேரில் உறவியப் பணியாளர்கள் திருமதி. ஸ்டெல்லா மற்றும் திரு. ரமேஷ்குமார் ஆகியோர் வழிநடத்தினார்கள். நல்வாழ்வு இல்லத்தில் மனநலம் பாதிக்கப்பட்ட சகோதரிகள் சுமார் 37 பேர் நோயாளியாக உள்ளனர். அவர்களுக்கு உறவியம் சார்பில் மதிய உணவு வழங்கப்பட்டது. அவர்களை பராமரிப்பது என்பது மிக மிக கடினமானது. இப்பணியை நிறுவன இயக்குநர் அருட்தந்தை தோமஸ் தக்கலை அவர்களும் அருள் சகோதரிகளும் சிறப்பாகச் செய்கின்றனர். அவர்கள் பணி தொடர புனித தோமையார் உறவியம் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் சமர்ப்பிக்கின்றோம்.



திரு, ரமேஷ்குமார், பள்ளிக்கோணம்.

# இரக்கத்தின் ஆண்டிற்கான செபம்

ஆண்டவராகியஇயேசு கிறிஸ்துவே,

வானகத்தந்தையைப்போல நாங்களும் இரக்கமுள்ளவர்களாக இருக்கக் கற்பித்தீரே! என்னைக் காண்பவர் தந்தையைக் காண்பர் என மொழிந்தீரே. எமக்கு உம் முகத்தைக் காட்டியருளும், நாங்கள் மீட்படைவோம். சக்கேயுவையும், மத்தேயுவையும் பணத்தின் அடிமைத் தனத்தினின்றும் படைத்த பொருட்களில் மட்டும் இன்பம் கண்ட விபச்சாரியான மதலேனாளையும் மீட்டதும் உம் அன்பு கனிந்த பார்வையே. உம்மை மறுதலித்த பேதுருவை மனம் நொந்தழச் செய்ததும், மனம்திருந்தியக் கள்வனுக்கு விண்ணகம் வாக்களித்ததும் உம் அன்பு கனிந்த பார்வையே!



'கடவுளின் கொடை இன்னதென்று அறிந்திருந்தால்,' என்று சமாரியப் பெண்ணுக்குக் கூறிய உம் வார்த்தை எமதாகட்டும். மன்னிப்பாலும் இரக்கத்தாலும் தமது வல்லமையை வெளிப்படுத்தும் கட்புலனாகாத் தந்தைக் கடவுளின் கட்புலனாகும் முகம் நீரே! உயிர்த்து மகிமைப்பெற்ற ஆண்டவராகிய உம் கட்புலனாகும் முகமாக உம் திருச்சபை இவ்வுலகில் விளங்கச் செய்வீராக.

அறியாமையிலும் தப்பறைகளிலும் இருப்பவரைப் புரிந்து, பரிவு கொள்ள வேண்டுமெனஉம் திருப்பணியாளர்களையும் வலுவின்மையால் போர்த்தினீரே. இத்திருப்பணியாளர்களை நாடுவோர் அனைவரும் உம்மால் தேடப்பட்டவராகவும், அன்பு செய்யப்பட்டவராகவும், மன்னிக்கப்பட்டவராகவும் உணரச்செய்வீராக.

இவ் இறையிரக்க யூபிலி, ஆண்டவரின் அருள்நிறை ஆண்டாக விளங்கவும், புது உத்வேகத்துடன் உம் திருச்சபை, ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும், சிறைப்பட்டோர்க்கும் ஒடுக்கப்பட்டோர்க்கும் விடுதலை வழங்கவும், பார்வையற்றோர்க்கு பார்வையளிக்கவும், எங்கள் ஒவ்வொருவரையும் உம் தூய ஆவியைப் பொழிந்து அபிஷேகித்தருளும்.

இம்மன்றாட்டை இரக்கத்தின் அன்னை மரியாளின் பரிந்துரை வழியாக, தூய ஆவியின் ஒன்றிப்பில் தந்தையுடன் இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற உம்மிடம் சமர்ப்பிக்கின்றோம். ஆமென்.

## BISHOP'S ENGAGEMENTS DECEMBER 2015

| DATE | Day | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Tuesday | 12.15pm<br>5.15pm | CNEWA meeting with lunch<br>FCC chapter |
| 2 | Wednesday | 4.30pm | Soosaipuram: Annual Day |
| 3 | Thursday | | Bishop's House |
| 4-6 | | | Padanthalumoodu: Annual Bible Convention |
| 7 | Monday | 6.30 pm | Muzhucode: CMC convent, Holy Qurbana |
| 8 | Tuesday | 9.30 am<br>6.30pm | Padanthalumoodu: Year of Mercy Inauguration<br>Pilankalai: Holy Qurbana at FCC |
| 9 | Wednesday | 9.30am<br>3.45pm | Curia Meeting<br>Vellambi: Holy Qurbana |
| 10-15 | | | Muscat visit |
| 16 | Wednesday | 9.30am | Pre-Christmas gathering for Presbyterium |
| 17 | Thursday | | Bishop's House |
| 18 | Friday | 10.00am<br>3.15pm<br>5.00 pm | Education Commission Meeting<br>Melpuram: Christmas Meeting<br>Christmas Meeting, Nagercoil |
| 19 | Saturday | | Visit to Charitable institutions |
| 20 | Sunday | 3.15pm | Bishop's House |
| 21 | Monday | 1.00pm | UGC Christmas Gathering, Thuckalay |
| 22 | Tuesday | | Pre-Christmas gathering for Shenkottai mission |
| 23 | Wednesday | 10.15am | Holy Qurbana, Cheruvally |
| 24 | Thursday | 12.00am | Christmas vigil at St. Alphonsa, Nagercoil |
| 25 | Friday | | Home visit |
| 26 | Saturday | 5.00pm | Alleppey: Engagement, Holy Qurbana |
| 27 | Sunday | 8.45am | Manimala: Silver Jubilee Mass |
| 28 | Monday | 9.15am<br>4.00pm | Priestly Ordination of Deacon Ritto<br>Marriage Qurbana, Ernakulam |
| 29 | Tuesday | 10.00am | Edathua:<br>Silver Jubilee of Fr. George Kulangara sdb |
| 30 | Wednesday | 11.00am<br>4.00pm | Mannanam: Talk to the Pilgrims<br>Mannanam: Feast day Holy Qurbana |
| 31 | Thursday | | Bishop's House |

Fr. K. J. Antony SDB
*Diocese Secretary*

இறையருள் செய்திகள் மற்றும் விமர்சனங்களுக்கு
iraiarultkly@gmail.com